கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

தை மாத இதழ்
NEWS BULLETIN
JANUARY 2026
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெறுகின்றது

SATURDAYS	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	12.30pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 5.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	12.30pm – 2.30pm
Free 11plus Verbal & Nonverbal Reasoning (Mrs. Gayathri Krish teacher)	2.00pm – 4.00pm
SUNDAYS	**Time**
Tamil	10.00am – 12.00pm
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 3.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	9.00am – 1.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	11.30am – 2.30pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	12.00am – 1.00pm
Free Miruthangam Online (Mr. Thillaiampalam Narendra teacher)	1.00pm – 3.00pm
Free 11plus Maths (Mr.Krish teacher)	9.00am – 11.00am



28/02/26	தமிழ்த்திறன் போட்டிகள் நடைபெறும்.



தைப்பொங்கல் நிகழ்வு

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையின் தைப்பொங்கல் 17/01/26 சனிக்கிழமை அன்று தமிழ்ப் பாடசாலையில் கொண்டாடப்பட்டது. இதில் பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



திரு கணேசையா பிரசாத் ஐயா அவர்கள் பூசையினைச் சிறப்பாகச் செய்திருந்தார். தேவார புராணத்தை தரம் 6 மாணவன் செல்வன் லக்ஸன் திருவரங்கன் பாடியிருந்தார்.



தமிழாசிரியைகள் திருமதி புஷ்பா தவத்துரை, திருமதி சுனித்ரா கேதீஸ்வரராஜா ஆகியோரின் தரம் 2 மாணவர்கள் பொங்கல் பாடலை வழங்கியிருந்தனர். தலைவர் திரு கந்தையா அரியரத்தினம் ஐயா, சிரேஷ்ட உப தலைவரும் தமிழாசிரியையுமான திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன், தலைமை ஆசிரியை திருமதி ரஜனி உதயசேகரன் ஆகியோர் பொங்கல் பற்றிய உரைகளை வழங்கியிருந்தனர்.



கதம்பம் பல்சுவை நிகழ்ச்சி

World peace and Harmony அமைப்பினரால் உலகெங்கிலுமுள்ள ஆர்வலர்களை இணைத்து பிரதி வியாழக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு Zoom இணைய வழியில் நாடத்தப்படும் கதம்பம் பல்சுவை நிகழ்ச்சியில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். எமது பாடசாலை நிகழ்வுகளை நிர்வாக அலுவலர் திருமதி பொன்மணி ஜெய்கணேஷ் அவர்கள் தொகுத்து வழங்கி வருகின்றார்.





08/01/2026 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், கர்நாடக சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான “கானகலாதர” “சங்கீத கலாநிபுண” இசைவாணர்” திரு தீனதயாளன் பத்மநாதன் அவர்களின் மாணவன் செல்வன் லக்சன் திருவரங்கன் பாடலையும், சுரத்தட்டு ஆசிரியை “கலாஜோதி” செல்வி ரிஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் அனுஜன் ஜெயசங்கர் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.



15/01/2026 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், வயலின் மற்றும் வீணை ஆசிரியை “கலாஜோதி” செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவி செல்வி கீர்த்தி ராஜா வயலின் இசையையும், சுரத்தட்டு ஆசிரியை “கலாஜோதி” செல்வி ரிஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் சஜீத் கேதீஸ்வரன் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.






22/01/2026 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், வயலின் மற்றும் வீணை ஆசிரியை “கலாஜோதி” செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவி செல்வி வர்ஷிதா ஜெயசங்கர் வீணை இசையையும், கர்நாடக சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான “நுண்கலைமானி” ஸ்ரீமதி வானதி சுரேஷ்குமார் அவர்களின் மாணவி செல்வி மொனிகா ஜெய்கணேஷ் பாடலையும் வழங்கியிருந்தனர்.






29/01/2026 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், செல்வி யாழினி கோபிகிருஷ்ணன் பாடலையும், சுரத்தட்டு ஆசிரியை “கலாஜோதி” செல்வி ரிஃபனி லோரன்ஸ்



அவர்களின் மாணவன் செல்வன் மகிழன் சதீஷ்குமரன் சுரத்தட்டு இசையையும், தமிழாசியைகள் திருமதி சுனித்ரா கேதீஸ்வரராஜா, திருமதி புஸ்பா தவத்துரை ஆகியோரின் தரம் 2 மாணவர்கள் செல்வி நான்சி சஞ்சீவ், செல்வி ஜென்சி சஞ்சீவ், செல்வன் அஜீ ராம்ஜீவ், செல்வி கயல் கேதீஸ்வரன், செல்வி சார்மி வினோதன் ஆகியோர் பொங்கல் பாடலையும் வழங்கியிருந்தனர்.





கொவன்றி தமிழர் ஒன்றியத்தினால் 31/01/2026 அன்று நடாத்தப்பட்ட ஆடல் பாடல் கொண்டாட்ட நிகழ்வில், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில் சிரேஷ்ட உப தலைவர் திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் அவர்கள் கலந்துகொண்டதோடு, மங்கல விளக்கையும் ஏற்றியிருந்தார்.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியர்களில் ஒருவரான "நாட்டிய கலாநிபுண" "பரதக்கலா வித்தகர்" "கலைமானி" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகள் செல்வி மோனிக்கா ஜெய்கணேஷ், செல்வி தருண்யா பகீரதன், செல்வி வர்ஷிதா ஜெயசங்கர் ஆகியோர் நடன நிகழ்வையும்,



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக கர்நாடக சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான "கானகலாதர" "சங்கீத கலாநிபுண" இசைவாணர்" திரு தீனதயாளன் பத்மநாதன் அவர்களின் மாணவர்கள் செல்வி சபீனா கோகிலநாதன், செல்வன் லக்ஸன் திருவரங்கன், செல்வி அருஷ்னி விஜயரூபன் ஆகியோர் பாடல்களையுயம் வழங்கியிருந்தனர்.



நிகழ்வுகளை வழங்கிய ஆசிரியர்கள் இருவரும் கொவன்றி தமிழர் ஒன்றியத்தினால் கௌரவிக்கப்பட்டனர்.



